27.10.2025 OS.No.47/2015 PW3 Name :.**ராஜேந்திரன்**

**குறுக்கு விசாரணை**

1. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் கிடையாது. அந்த ஊரில் கேபில் டிவி நடத்துவதால் அவர்கள் எனக்கு தெரியும். 2000 ஆண்டிலிருந்து நான் கேபில் டிவி நடத்தி வருகிறேன். தற்போதுவரை அதை நடத்தி வருகிறேன். பாலகிருஷ்ணனின் மனைவி அக்கா கம்சலா என்பவர் என்னை சாட்சி சொல்ல வரச்சொன்னார். அவர் எனக்கு உறவினர் இல்லை. பாலகிருஷ்ணனை சுமார் இறப்பதற்கு 5 ஆண்டுகளுக்கு முன் எனக்கு தெரியும். சொத்துகள் பாலகிருஷ்ணனின் தனிபட்ட சொத்துகள் என்றும் அவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்தது என்பது தெரியுமா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.
2. பாலகிருஷ்ணன் வீட்டில் முதல் பிறந்த நபர் பெயர் கோவிந்தராஜ் அவருக்கு விவரம் தெரியாத காரணத்தினால் நான் பாலகிருஷ்ணனை கூட்டு குடும்பகர்தா என்று கூறுகிறேன். கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து சொத்துகள் பாலகிருஷ்ணனின் பெயரில் வாங்கபட்டதாக கூறுகிறேன். கூட்டுகுடும்ப சொத்துகள் என்பது தேவமங்களத்தில் சுமார் 4, 5 ஏக்கர் உள்ளது. அது அவர்களுடைய பரம்பரை சொத்து ஆகும். பெயர் தெரியாது. பூங்காவனம் பெயரில் இருந்தது. அதற்கான ஆவணங்களை பார்த்ததில்லை. அந்த சொத்து தற்போது யாரிடம் உள்ளது என்று நியாபகம் இல்லை.

3. பூர்விக சொத்து மற்றும் வழக்கு சொத்தின் வருவாய் ஆவணங்கள் தற்போது யார் பெயரில் உள்ளது என்பது எனக்கு தெரியாது. வழக்கு சொத்துகளில் பாதியை லட்சுமணன் பாலகிருஷ்ணன் பெயருக்கு பத்திரம் செய்து கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. சொத்துகள் குறித்து ஏற்கனவே சண்முகம் என்பவர் பெயருக்கு பவர் கொடுக்கபட்டு அதன்பின் ரத்து செய்யபட்ட விவரம் எனக்கு தெரியாது. ஏற்கனவே வழக்கு சொத்துகள் குறித்து பாலகிருஷ்ணன் ஆம்பூர் நீதிமன்றத்தில் அ.வ.எண். 72/2007 என்ற வழக்கு போட்டு அதில் பாலகிருஷ்ணனுக்கு ஆதரவாக தீர்ப்பு கூறபட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.
4. அது சம்மந்தமான மேல்முறையீடு பாலகிருஷ்ணனுக்கு சாதகமானது பற்றி எனக்கு தெரியாது. பாலகிருஷ்ணன் இறக்கும்வரையில் அவருக்கும் லட்சுமணனுக்கும் விரோதம் இருந்தது என்றால் அவ்வாறு இல்லை. பாத்தீமா ரீட்டா பெயரில் பாலகிருஷ்ணன் எழுதிகொடுத்த கிரைய ஆவணம் மற்றும் கிரைய ஒப்பந்தம் ஆகியவற்றை நான் பார்த்ததில்லை. நான் ரங்காபுரம், விண்ணமங்களம் பகுதியில் கேபில் தொழில் செய்கிறேன். அந்த பகுதியில் உள்ள மக்களின் சொத்து தொடர்பான பிரச்சனை எதையும் நான் விசாரிப்பதில்லை.
5. பாலகிருஷ்ணன் இறந்ததற்கு பின் அவரது குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனை குறித்து மேலோட்டாக தெரியும் உள்விவகாரம் தெரியாது. 1987 ஆவணம் குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது. சொல்லிதான் தெரியும். லட்சுமணன் காணாமல் போனதற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. பாண்டியன், இளங்கோவன், கொடிமலர் என நான்

முதல் விசாரணையில் கூறியுள்ள நபர்கள் சொத்தை அபகரிக்க வந்த நபர்கள் ஆவார்கள்.

6. பாலகிருஷ்ணனிடமிருந்து சொத்தை அபகரித்துள்ளார்கள். அந்து ஆவணத்தை நான் பார்க்கவில்லை. பார்க்காத ஆவணத்தை தான் ரத்து செய்யவேண்டும் என கேட்டுள்ளேன். நான் கம்சலாவின் உறவினர் என்பதால் பொய் சாட்சயிம் கூறுகிறேன் என்றல் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 27/10/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.10.27 16:25:16 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.